**இலங்கை மன்றம் - 2013**

இலங்கை மன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல்கூற்று, உரிமைமூலதனத்தில் மாற்றங்கள்கூற்று காசுப்பாய்ச்சல்கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புகளையும் உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு, 1973 இன் 31 ஆம் இலக்க இலங்கை மன்ற அதிகாரச் சட்டத்தின் 13(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தால் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை மன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்ற என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 63,400 ஆன நிலையான சொத்துக்களும் ரூபா 76,882 ஆன காகிதாதி அலுமாரியும் மீண்டெழும் செலவுகளாகக் கருதி கணக்கு வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) முற்றாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தபோதும், தற்போது உபயோகிக்கப்படும் ரூபா 12,426,541 கிரயமான சொத்துக்கள் மீள் விலைமதிப்புச் செய்யப்பட்டு கணக்கிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டம், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

பின்வரும் அமைந்தொழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டம், விதி, பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| | நி.பி 757(1)(ஆ) | பொருள் கணிப்பீட்டு அறிக்கை 2014 செப்டம்பர் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பௌதீக ரீதியான மீதிகள் களஞ்சிய ஏடுகளுடன் இணக்கம் செய்யப்பட்டு குறைவு/ மேலதிகம் காட்டப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2009 செப்டம்பர் 18 ஆம் திகதிய PF/437 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் தேசிய காப்புறுதி நிதியத்தால் அல்லது வரையறுக்கப்பட்ட காப்புறுதிக் கம்பனியால் காப்புறுதிப் பாதுகாப்பு செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும், நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்கள் அச் சுற்றறிக்கைக்கு மாறாக ரூபா 510,359 செலுத்தி தனியார் காப்புறுதிக் கம்பனியில் காப்புறுதி செய்யப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (இ) | 2006 சனவரி 25 திகதிய 8 ஆம் இலக்க கொள்வனவு வழிகாட்டிக்கோவை 5.4.4(1) ஆம் பிரிவு | ஏற்றுக்கொள்ளத்தக்க முற்பண உத்தரவாதம் சமர்ப்பிப்பதன் அடிப்படையில் ஆகக்கூடியது நூற்றுக்கு 20 வீதம் முற்பணம் வழங்கப்படலாம் எனினும் கூறப்பட்ட சுற்றறிக்கைக்கு முரணாக நிறுவனத்தால் ஒப்பந்தக் காரர்களுக்கு ஒப்பந்தப் பெறுமதியின் நூற்றுக்கு 40 வீதமான அதாவது ரூபா 107,496 முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. |

### 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

நிறுவகத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய பணிப்பாளர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 253,989 ஆன தொகையை 2006 ஆம் ஆண்டிலிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மன்றத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் பின் ரூபா 5,897,396 ஆன மிகை ஏற்பட்டிருந்ததுடன் அதற்கெதிராக முன்னைய ஆண்டின்போது ரூபா 4,083,994 பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டவாறு மீளாய்வாண்டில் நிதிப் பெறுபேறுகளில் ரூபா 9,981,390 ஆன முன்னேற்றத்திற்கான முக்கிய காரணம் ஏனைய வருமானங்களில் ரூபா 53,687,100 ஆல் ஏற்பட்ட அதிகரிப்பு ஆகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

டிப்ளோமா கற்கைநெறிகள் இரண்டில் சேவை இணைவு அனுசரணை பெறாத மாவணர்களிடமிருந்து கற்கைநெறிக் கட்டணங்கள் முறையாக அறவிடப்பட்டிருக்க வில்லை.

### 4.2 பிற அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிறுவகத்தின் சொத்துக்கள்

மன்ற நிறுவகத்தின் ஒரு பகுதியாகச் செயற்பட்ட இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிறுவகம் 2010 நவம்பர் 22 ஆம் திகதிய 1681/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் ஊடகங்கள் மற்றும் தகவல் அமைச்சின் கீழ் மாற்றப்பட்டிருந்தது. 2011 நவம்பர் மாதத்தில் அப்பகுதியின் பொறுப்பிலிருந்த சகல சொத்துக்களும் அமைச்சுக்குப் மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 36,653,585 பெறுமதியான பயிற்சி நிறுவகம் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடம் என்பன தொடர்ந்தும் நிறுவகத்தின் சொத்தாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

### 4.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

நிறுவகத்திற்கும் தனியார் கம்பனியொன்றுக்குமிடையே ஏற்பட்ட வழக்கு தீர்ப்பின்படி தீர்ப்பு வழங்கப்பட்ட 2013 டிசெம்பர் 07 ஆம் திகதியிலிருந்து 35 நாட்களுக்குகள் நிறுவகத்தால் கம்பனிக்கு ரூபா 1,159,525 கொடுக்க வேண்டியிருந்தும், அது கணக்காய்வுத் திகதி வரை செலுத்தப்பட்டிக்கவில்லை. தீர்ப்பின்படி, அக்கம்பனியுடன் செய்யப்பட்டிருந்த முதலாவதான உடன்படிக்கையின் 60(7) ஆவது பிரிவின் ஏற்பாடுகளின்படி, மன்ற நிறுவனத்திற்கு தாமதத்திற்கான வட்டி செலுத்தப்பட வேண்டியிருக்கும் எனக் காட்டப்பட்டிருந்த போதிலும்

அத்தகைய தாமதத்திற்கான வட்டியை பிழையின்றிக் கணக்கிடுதல் தொடர்பான ஏற்பாடுகள் உடன்படிக்கையில் இருக்கவில்லை.

**5. கணக்களி தகைமையும் நல்ஆளுகையும்**

**5.1 செயற்பாட்டுத் திட்டம்**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த செயற்பாட்டுத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு நாளதுரையாக்கப்பட்டிருக்காமையால் விரும்பப்பட்ட இலக்கையும் செயலாற்றலையும் ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) செயற்பாட்டுத் திட்டத்திற் காட்டப்பட்டிருந்த 38 கற்கைநெறிகளில் 6 டிப்ளோமாவும் 10 சான்றிதழ் கற்கைநெறிகளும் மட்டுமே ஆண்டினுள் நடைபெற்றிருந்தது.

**6. முறைமைகளும், கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் காலத்திற்குக் காலம் மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகளுக்கு விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கொள்வனவுகள்
(ஆ) கடன்பட்டோர்
(இ) ஆளணி நிருவாகம்
(ஈ) கற்கைநெறிகளில் வருமான மீட்டுதல்